**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.80/2022**

**<u>தேதி :22.03.2024</u>**

**<u>(பி.வா.சா.–1) – திருமதி. பவுனாத்தாள்</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>**

**<u>குறுக்கு விசாரணை : (வாதி தரப்பில்)</u>**

1. நான் இந்த வழக்கில் 2–ம் பிரதிவாதி. வாதி என்னுடைய அக்கா காளியாத்தாளின் மகள் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீகச் சொத்து என்றால் சரிதான். 28.09.1955 ஆம் தேதி சின்னச்சாமிகவுண்டருக்கு பாகவிஸ்தி மூலம் தாவா சொத்து கிடைத்தது என்றால் சரிதான். சின்னச்சாமிகவுண்டர் எந்தவிதமான ஏற்பாடும் செய்துவைக்காமல் திடீரென இறந்துவிட்டார் என்றால் சரிதான். சின்னச்சாமிகவுண்டருக்கு தெய்வாத்தாள் முதல் மனைவி என்றும், முத்தாத்தாள் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். தெய்வாத்தாளுக்கு நான், காளியாத்தாள், பொன்னாத்தாள் ஆகியோர் மக்கள் என்றால் சரிதான். முத்தாத்தாளுக்கு கருப்புச்சாமி என்ற ஒரே மகன் என்றால் சரிதான். சின்னச்சாமிகவுண்டரின் நேரடி வாரிசுகள் நாங்கள் நான்கு பேர் என்றால் சரிதான். அதன்படி சின்னச்சாமிகவுண்டரின் பூர்வீகச் சொத்துக்களில் 4–ல் 1 பாகம் எனக்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவா சொத்து தொப்பம்பட்டி, கோரிக்கடவு, அக்கரைப்பட்டி மூன்று கிராமங்களில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சின்னச்சாமிகவுண்டர் உயிருடன் இருக்கும்போது வாதியின் தாயாரும், நாங்களும் கூட்டாக அனுபவித்து வந்ததாகச் சொன்னால் சரிதான்.

2. தாவா சொத்தில் 3–ம் பிரதிவாதி உயில் ஆவணம் சின்னச்சாமிகவுண்டர் எழுதி வைத்ததாகச் சொல்லப்படும் ஆவணத்தின் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறான உயில் எழுதிவைக்கவில்லை. அது போர்ஜரியாக தயாரிக்கப்பட்ட ஆவணமா என்றால் ஆமாம். உயில் ஆவணம் எழுதிவைத்திருந்தால் தாவா சொத்தில் எனது பங்கை அது கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். எனது பாகத்தைப் பொறுத்துவரை நான் நீதிமன்றக் கட்டணம் செலுத்த தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரிதான்.

**<u>8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

**<u>14–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கு யார் யார் மீது என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் கருப்புச்சாமி மீது சொத்து கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு வருடம் தெரியாது. எனக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளார்கள். எனது மகனுக்கு 39 வயதாகிறது. எனக்கு திருமணம் ஆனதிலிருந்து பெரியமொட்டனூத்து கிராமத்தில் தான் விவசாயம் செய்து கணவருடன் வசித்து வருவதாகச் சொன்னால் சரிதான். தாவா 1 லக்க சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை சின்னச்சாமிகவுண்டர், அவரது மகன் கருப்புச்சாமி ஆகியோர் ஆரம்பத்திலிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் நாங்களும் தான் அனுபவித்து வருகிறோம். நாங்கள் அனுபவித்து வருவதாக சொல்வதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

2. கருப்புச்சாமி, விக்னேஷ்குமார், சற்குணம் ஆகியோர் 2008 ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி பாகப்பிரிவினைக்குப் பிறகு அவர்கள் வங்கியில் கடன் வாங்கி விவசாயம் செய்து வந்ததாகச் சொன்னால் சரிதான். எனக்கும் ரூ.50,000/– வருவதாகச் சொன்னார். நானும் வங்கிக்கு கட்டுவதற்காக ரூ.50,000/– கொடுத்தேன். ரூ.10,000/–ஐ திருப்பிக் கொடுத்துவிட்டார். அவ்வாறான தொகை கொடுத்ததற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சின்னச்சாமிகவுண்டரின் மகள் என்பதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வழக்கு சொத்தில் பாகம் கேட்பதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2008 ஆம் ஆண்டு பாகவிஸ்திக்குப் பிறகு 3 முதல் 5 பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்த சொத்தைத் தான் பல்வேறு பரிவர்த்தனைக்குப் பிறகு 14–ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் நாங்களும் தான் அனுபவிக்கிறோம்.

3. தாவா 1 லக்க சொத்தில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் தென்னங்கன்றுகள் வைக்கப்பட்டது. அவை வைக்கப்பட்டு 1–1/2 வருடம் ஆகிறது. நான் சொல்வது தவறு என்றும், தற்போது பலன் தரக்கூடிய தென்னை மரங்கள் இருப்பதாகச் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், நான் தாவா சொத்தை அனுபவிக்கவுமில்லை

என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 3 முதல் 5 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதனை விற்க அவர்களுக்கு முழு உரிமையுள்ளது என்றும், அதனடிப்படையில் தான் 14–ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி ஈஸ்வரி வழக்கு தாக்கல் செய்யப் போகிறார் என்ற விபரம் எனக்கு முன்பாகவே தெரியுமா என்றால் இல்லை, வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் தெரியும்.

4. தாவா சொத்து பூர்வீகச் சொத்து என்பதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர்வாதம் நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல. 14–ம் பிரதிவாதி வாங்கிய கிரையம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் எந்தக்காலத்திலும் தாவா சொத்தில் கூட்டுச் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.03.23 15:04:34 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.